1992 ஏப்ரல் 24]

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதியாகிய செங்கிப்பட்டி, பூதலூர் பகுதிகளில் இருந்து கோரிக்கை வரவில்லை என்று கூறுகிறார்கள். நானும் அந்தப் பகுதியிலே தொழில் தொடங்கவேண்டும் என்று அரசிடம் விண்ணப்பம் போட்டு இருக்கிறேன். அந்தப் பகுதியிலிருக்கின்ற பல கிராம மக்கள் மழைக் காலங்களில், 2, 3 மாதத்திற்கு கடலை, துவரை, விதைத்து, அந்த விவசாயம் முடிந்த பிறகு, அல்லது ஏரிகளில் மழைக் காலங்களில் தண்ணீர் தேங்கினால், அதிலே விவசாயம் செய்த, பிறகு அந்த ஏரிகளிலே தண்ணீர் குறைந்துவிட்டால், தாழ்வான பகுதியிலே இருக்கிற அந்தப் பகுதி மக்கள், வெளிப் பகுதிக்குச் சென்று வேலை தேடிச் செல்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் கிராமத்திற்கு, கிராம மக்களுக்கு ஏதாவது தொழில் செய்து வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கிப்பட்டி கிராமத்தில் தொழிலகங்கள் இல்லை. ஆனால் பூதலூர் பகுதியில் சிட்கோ தொழில் நிறுவனத்தின் மூலம் 10 சிறு தொழில் கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, இன்னும் 5 இடங்கள் காலியாக உள்ளன. ஒரு தொழில் கூடத்தில் மட்டும் சோடா, கலர் பானங்கள் தயாரிப்பு நடைபெறுகிறது. மற்றொரு மூன்றில், காப்பித்தூள், சாக்பீஸ் போன்ற சிறுதொழில் நடத்த ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவைகள் இயங்கவில்லை. எனவே, இதுபோன்ற தொழில் கூடங்கள் அமைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகுந்த தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தவேண்டும். அதற்கு அரசு சிறந்த முறையிலே உரிய, சலுகைகளை அளிக்கும் என தெரிவித்துக்கொள்கிறேன்.

612—

ஒட்டன்சத்திரத்தில் அரசு கலைக்கல்லூரி அமைத்தல்.

* 168—திரு. ஏ. டி. செல்லச்சாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன்சத்திரத்தில் ஒரு அரசு கலைக்கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், புதிய கல்லூரி எப்போது துவக்கப்படும்

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.